**செ. வெ. எண்: 582** **நாள்: 03.10.2011**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.10.2011) தலைமைச் செயலகத்தில், திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கொமரலிங்கம் கிராமத்தில் பழனி – அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் பாதயாத்திரையாக வரும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒய்வுக்கூடத்தினை திறந்து வைத்தார்கள்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு தைப்பூசம், சஷ்டி மற்றும் இதர திருவிழா நாட்களில் பெருமளவில் பக்தர்கள் பாதயாத்திரையாக வருகை தருகிறார்கள். இவ்வாறு பாதயாத்திரையாக வருகை தரும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கொமரலிங்கம் கிராமத்தில் 2925 சதுர அடி பரப்பளவுள்ள காலியிடத்தில் 1014 சதுர அடி பரப்பளவில் நான்கு குளியலறை மற்றும் நான்கு கழிப்பறை வசதிகளுடன் திருக்கோயில் நிதியின் மூலம் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக பக்தர்கள் ஒய்வுக்கூடம் கட்டப்பட்டுள்ளது. இந்த பக்தர்கள் ஒய்வுக்கூடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேற்கண்ட பக்தர்கள் ஒய்வுக்கூடம் கோயம்புத்தூர், பொள்ளாச்சி, ஆனைமலை, கோட்டூர் மலையாண்டி பட்டினம், உடுமலைப்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பக்தர்கள் பாதயாத்திரையாக வரும்போது பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 3.10.2011